**அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

---

அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2005 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட 109 ஆம் இலக்க நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(2) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றினால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு நிதி முகாமையாளரும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் பொறுப்பாக உள்ளனர்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படை ஒன்றினை எனது கணக்காய்வு வழங்குகின்றது என நான் நம்புகின்றேன். எனது சிறந்த அறிவுக்கும் எனது அபிப்பிராய நோக்கத்திற்கும் தேவையானது என நம்பப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுகின்றவாறு செயற்பாடுகள் தொடர்பாக நிதியத்தால் பொருத்தமான கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டிருந்தன என்றும், நிதியத்தின் முகாமையாளரால் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தரப்பட்டுள்ள குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடியவாறு கணக்குப் புத்தகங்களுடன் அமைவுறுகின்றன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

**2.2 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்களும் ஏனைய பெறப்பட வேண்டிவைக்கான கணக்கீட்டுப் பரிகாரங்களும்.**

(அ) நிதியம் 2012 ஆம் ஆண்டிற்காக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவிற்கு (ரீஆர்சீஎஸ்எல்) ரூபா 325,812,879 இனை பங்கிலாபமாக செலுத்த வேண்டியிருந்தது. இருப்பினும், எந்தவொரு நியாயமான அடிப்படையோ அல்லது ரீஆர்சீஎஸ்எல் இடமிருந்து எழுத்துமூல அங்கீகாரமோ இன்றி இத்தொகை திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 810,589,692 தொகைக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதியம் ஐந்தொகையில் ரூபா 484,776,812 தொகையை திறைசேரியிடமிருந்தான ஏனைய பெற வேண்டியதொன்றாக கணக்கீடு செய்திருந்த போதிலும், இத்தொகை பொதுத் திறைசேரியின் புத்தகங்களில் பொறுப்பொன்றாகப் பதிவுசெய்யப்பட்டோ அல்லது உறுதிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. ஆகையால், இத்தொகையின் அறவீட்டுத்தன்மை ஐயத்திற்குரியதாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மைகள்**

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2005 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட 109 ஆம் இலக்க நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 12 ஆம் பிரிவின் (அ) பந்தியின் பிரகாரம், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும், இருப்பினும், மீளாய்வாண்டில் எந்தவொரு கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 யூன் 27 ஆந் திகதிய புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் (எம்ஓயூ) 6 ஆம் விடயத்தின் படி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தனிப்பட்ட ரீதியில் பங்குபற்றுகின்ற அரசாங்க நிறுவனங்கள் குறைந்தது ஆறு மாதங்களுக்கான அவர்களுடைய எதிர்வுகூறப்பட்ட நிதிப் பாய்ச்சல் விபரங்களை நிதியத்தின் முகாமையாளருக்குச் சமர்ப்பிக்குமாறு வேண்டலாம். இருப்பினும், மீளாய்வாண்டிற்காக அவ்வாறான எந்தவொரு எதிர்வுகூறப்பட்ட நிதிப்பாய்ச்சல் விபரங்களும் நிதியத்தின் முகாமையளரால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 1,113.49 மில்லியன் பங்கிலாபத்திற்கு முன்னரான தேறிய வருமானத்திற்கு எதிராக ரூபா 110.01 மில்லியன் ஆன பங்கிலாபத்திற்கு முந்திய தேறிய வருமானத்தினை விளைவித்திருந்தமையால், அது நிதி விளைவுகளில் ரூபா 1,003.48 மில்லியன் அல்லது 90.12 சதவீத குறைவைக் காண்பிக்கின்றது. முதலீடுகள் குறைவடைந்ததனைத் தொடர்ந்து வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறைவே இதற்கான பிரதான காரணமாகும்.

(ஆ) ஆண்டு காலத்தின் போதான மீளெடுத்தல்கள் ரூபா 247.47 மில்லியனாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் எந்தவொரு அரசாங்க நிறுவனவும் நிதியத்திற்கு எவ்வித மிகையினையும் வைப்புச் செய்திருக்கவில்லை.

(இ) நிதியத்தின் பிரதான வருமான மூலம் முதலீடுகள் மீதான வட்டியாகும். இருப்பினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலீடுகள் மீதான வட்டி வருமானம் ரூபா 246.30 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பங்குபற்றும் அரசாங்க நிறுவனங்களின் எதிர்வுகூறப்பட்ட நிதிப் பாய்ச்சல் மீதான கட்டுப்பாடு
(ஆ) மீளெடுத்தல்கள் மீதான கட்டுப்பாடு
(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர் கூட்டங்களை நடாத்துதல்